1980 ஜூலை 22]

திரு. மு. ப. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளிகளில் இருக்கும் விளையாட்டு ஆசிரியர்களுக்கு இந்தக் கராத்தே பயிற்சி தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தற்போது பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு என்னென்ன தெரியும் என்ற விவரம் இல்லை. சில பேருக்குத் தெரிந்து இருக்கலாம். சிலபேருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குக் கராத்தே பயிற்சி அளிப்பது பற்றி இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள். வெளியாரால் தாக்கப்படுகிறபோது அதைப் பயன்படுத்தினால் பரவாயில்லை. குடும்பத்திற்குள்ளே ஏற்படும் தகராறில் கணவன்மார்களுக்கு எதிரான நிலையில் அதைப் பயன்படுத்தினால், அதற்கு பாதுகாப்புத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, குடும்பங்களிலே கூட தங்களைத் காத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஒரு பெண்ணுக்கு ஏற்படக் கூடும்.

தேரெழுந்தூர் அருள்மிகு ஆமருவிப்பெருமாள் ஆலயம்

*வினா எண் 32—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அருள்மிகு ஆமருவிப் பெருமாள் ஆலய நிர்வாக அதிகாரி மீது பொதுமக்களிடமிருந்து புகார்மனு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மனுவின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) அருள்மிகு ஆமருவிப் பெருமாள் ஆலயத்தின் செயல் அலுவலர் மீதான புகார்களின் மீது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார் அவ்வலுவலர் மாற்றப்பட்டு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நாகை துணை ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, இந்த ஆமருவிப்பெருமாள் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றியவர் பெயர் என்ன? அவர்மீது என்னென்ன குற்றங்கள்

சொல்லி பொதுமக்களிடமிருந்து புகார் வந்துள்ளது? வந்த புகாரின் அடிப்படையில் அவரை மாற்றியிருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்த நிர்வாக அதிகாரியின் பெயர் மாணிக்கம். அவர் மீது 7 புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் 6 புகார்கள் ஆதாரம் இல்லை என்று விசாரணையிலிருந்து தெரியவந்திருக்கிறது. ஒரு புகாரைப் பொறுத்தவரையில் அவர் அந்தப் பகுதியிலே அனுமதி இல்லாமல் கோழி, ஆடுகளை வளர்த்து வந்தார் என்பது. அது தவறு. அதை ஒட்டி மேலும் அந்தப் பகுதி மக்கள் புகாரையும் குறைகளையும் தீர விசாரிப்பதற்காக அவர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, அந்த ஆலயத்திலே மணியமாகப் பணியாற்றிய திருநாவுக்கரசு என்பவரை அந்த நிர்வாக அதிகாரி பழிவாங்கும் நோக்கத்துடன் நீக்கிவிட்டார் என்பதற்காக அவர் 12—7—1980 அன்று உண்ணாவிரதம் இருந்த தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மூலக்கேள்வி புகாரைப் பற்றியது. அந்தப் புகார்களைப் பற்றிய விளக்கமும் பதிலும் இருக்கிறது. இப்போது ஒரு புதிய விளக்கத்தைத் தருகிறார். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர முடியும்.

SANDAL WOOD OIL FACTORY IN NORTH ARCOT DISTRICT

*Q. 33; THIRU G. VISWANATHAN and THIRU B. SUNDARAM : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

a) whether there is a proposal to start a sandal wood oil factory in North Arcot District: and

b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—

(அ) ஆம்.

(ஆ) ஆண்டொன்றுக்கு 5.2 டன் சந்தனத் தைலம் எடுக்கும் திறன் கொண்ட சந்தனத் தைலத் தயாரிப்பு ஆலை ஒன்றை ரூ. 22.85 இலட்சம் செலவில் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகே அமைக்க முடிவு செய்யப்பட்டு துவக்க